**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 25.11.2023

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப வணிக காப்பக தொழில் முனைவோர்க்கு SISFS திட்ட நிதியுதவி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், தொழில்நுட்ப வணிக காப்பகமானது மத்திய அரசின் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம், தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுதுறை ஆகியவற்றின் நிதியுதவியுடன் 2022 முதல் இந்திய தொழில் முனைவோர்களுக்கான ஆரம்ப மூலதன திட்டத்தின் (Startup India Seed fund Scheme - SISFS) மையமாக திகழ்கிறது.

இத்திட்டமானது தொழில் முனைவோர்களின் கருத்தாக்கம், முன்மாதிரி மேம்பாடு, தயாரிப்பு பொருட்களை சோதனை செய்தல், சந்தைப்படுத்துதல் மற்றும் வணிகமயமாக்கல் போன்றவற்றிற்கு நிதியுதவி வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வணிக கருத்தின் ஆதாரம் காண்பித்தல், முன்மாதிரி உருவாக்குதல், தயாரிப்புகளுக்கான சோதனைகள் ஆகியவற்றிற்கு ரூ.20 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் சந்தைப்படுத்துதல், வணிகமயமாக்கல் மாற்றத்தக்க கடன் வழியில் வணிகத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு ரூ.50 இலட்சம் வரை முதலீடு தொகையாக வழங்கப்படுகிறது. 621 விண்ணப்பதாரர்கள் ISMC குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டு ஒரு தொழில் முனைவோர் திரு.தீபேந்திரயாதவ் நிறுவனர், M/s MORSURE PURE FOODS TECHNOLOGY LLP அவர்களின் தயாரிப்பு பொருட்களை மேம்படுத்துவதற்காக ரூ.20 லட்சம் வரையிலான கடனுதவியாக பெற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்களிடம் தங்கள் புதுமை தயாரிப்பு குறித்தும் அதன் மேம்பாடு குறித்தும் 24.11.2023 அன்று கலந்துரையாடினார். மேலும் துணைவேந்தர் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் முனைவோருக்கு ரூ.20 லட்சம் வரையிலான கடனுதவிக்கான காசோலையை வழங்கி வாழ்த்து கூறினார். எனவே தொழில் முனைவோர் இந்த திட்டத்தின் நிதியை தங்களின் தயாரிப்பு பொருட்களை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தி கொள்வர். இந்நிகழ்ச்சியில் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தின் இயக்குனர் முனைவர் ஏ.சோமசுந்தரம் அவர்கள் மற்றும் தொழில் நுட்ப வணிக காப்பக செயல் இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி திரு.A.V.ஞானசம்பந்தம் கலந்து கொண்டனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**